# THE MORNING STAR.

Vol. 62. Jaffna, Thursday 28th of Aug. 1902. No 18

Righteousness Exalteth a Nation but Sin is a Reproach to any People.

*RECEIPT FOR THE MORNING STAR.*
1902

| | | |
|---|---|---|
| Straits Settlement. | Messers A. S. Daniel & A. Canagaratnam. | 7. 87 |
| Navaly. | Rev R. Bryant. | 1. 25 |

THE CEYLON STEAMSHIP
COMPANY LIMITED.



Lady Havelock and Lady Gordon are appointed to sail from Kangesanturai for Colombo on the undermentioned dates:—

Via Paumben.

| | | | |
|---|---|---|---|
| Lady Havelock | 2nd | Sep. | 1902. |
| " " | 16th | " | " |
| " " | 30th | " | " |

Via Point Pedro.

| | | | |
|---|---|---|---|
| Lady Gordon | 8th | Sep. | " |
| " " | 22nd | " | " |

W. MATHER & SON, Agents

WHERE To See
and WHERE To Buy
The Best Articles?
You will see the HIGH GRADE GOODS
at ALEXANDER BROS. & CO.

"FLEET"
A first class Sample Bycycle
first of the kind to Jaffna, just received
Price Rs. 300 Cash.

Alexander Brothers & Co.
Importers of British & Foreign Goods,
THE JUNCTION.
JAFFNA.

THE JAFFNA COMMERCIAL
CORPORATION LIMITED.

Remittances can be made
Between,
Jaffna, Batticaloa, and Colombo
Both by wire and Draft
To and From

**Colombo and Jaffna**

| | |
|---|---|
| Commission on wire transfer above Rs 500.00 | 1° |
| on wire transfer under " 500.00 | 2° |
| on draft on sums above " 500.00 | ½° |
| ondraft on sums under " 500 00 | 1° |

**From Jaffna to Batticaloa.**

| | |
|---|---|
| Commission on wire transfer | ½° |
| Commission on Draft | 1° |

**From Batticaloa to Jaffna.**

| | |
|---|---|
| Commission on wire transfer | 1° |
| Commission on Draft | ½° |

To and from
**Colombo & Batticaloa**

| | |
|---|---|
| Commission on wire transfer | 1½° |

Commission on Draft and cashing Colombo cheques ¾°/c on sums above Rs. 250.00
1o/o on sums under Rs. 250.00

**From Jaffna to Madras Calcutta & Rangoon**

Commission on Draft } Madras & Calcutta ¾°
{ Rangoon 1 o/o

| | |
|---|---|
| Colombo Bankers. | The National Bank of India Ltd. |
| Madras | The National Bank of India Ltd. |
| Calcutta | The National Bank of India Ltd. |
| Rangoon | The National Bank of India Ltd. |
| Batticaloa | The Jaffna Commercial Corporation Ltd |
| Jaffna | The Jaffna Commercial Corporation Ltd |

WILLIAM MATHER.
Managing Director,

NOTICE.

The Life and works of
T. DE WITT TALMAGE.

The Prince of the American Pulpit,
The Greatest Lecturer of the Century,
The World famed Orator Writer.
THE ONLY AUTHORIZED EDITION
500 Octavo pages with beautiful illustrations
PRICE $2 or Rs 6.
Apply to
Manager, Morning Star, Batticotta.

FOR SALE.

A Commodious House and garden situated at Manepay South called "Sellatha Valavu in extent 15 Lachams apply to

C. S. Arunachalam.
Culloden.
Neboda.

USEFUL BOOKS.

MODERN LETTER WRITER. (SIXTH EDITION.) Containing 635 letters. Useful to every man in every rank and position of life for daily use. Re. 1, post 1 anna.

HELPS TO THE STUDY OF ENGLISH (THIRD EDITION.) Containing an exhaustive collection of Phrases. Idioms, Proverbs, with their explaminations and proper uses Rs. 3, postage 3 annas.

Every-Day Doubts and Difficulties (in reading, speaking and writing the English Language.) Third Edition Re. 1, post 1 anna.

A HAND-BOOK OF ENGLISH SYNONYMS.—Explained with illustrative sentences. Aids to the right use of *synonymous* words in composition. Re. 1, postage 1 anna.

A COMPANION TO ENGLILH GRAMMAR AND COMPOSITION:- Very useful to the Entrance candidates 8 annas, postage 1 anna.

Beauties of Hinduism. With notes, Ans, 8. post 1 anna.

Select Speeches of the Great Crators:—Vols. I & II. These books help to write idiomatic English. improve tha oratorical and argumentative powers, &c. Each Volume Rs. 2, postage 1½ annas.

Solutions of 642 very important Examples in ARITHMETIC, ALGEBRA AED GEOMETRY. For Entrance and Preparatory Classes. Rs. 1 8, postage 1 anna.

Solutions of over 300 typical Examples in TRIGONOMETRY. For F. A. students. Re. 1, postage 1 anna.

By V.P. Post 2 annas extra. To BE HAD OF (MESSRS BOSE. BANERJI & Co., 40. SUKEA'S STREET, (HARRISON ROAD CALCUTTA.

ORDER NISI

In the District Court of Jaffna,

*Testamentary Jurisdiction* } No. 1282.

In the Matter of the Estate of the late Sithamparappillai Veluppillai of Kuala Lumpur in the Straits Settlements Deceased.

Sithamparappillai Kasinathar of Karativu Petitioner.

1. Parupathy widow of Sithamparappillai of Karativu,
2. Ramar Sanmugam and wife,
3. Seethavan of Do.,
4. Suppar Kandiah and wife,
5. Chinnappillai of Do., Respondents.

This matter of the Petition of Sithamparappillai Kasinather of Karativu praying for Letters of Administration to the estate of the abovenamed deceased Sithamparappillai Veluppillai of Kula Lumpur coming on for disposal before W. R. B Sanders Esquire, District Judge on the 22nd day of July 1902 in the presence of Mr. G. N. H. Tampoe Proctor on the part of the Petitioner and affidavit of the Petitioner dated the day of July 1902 having been read, it is declared that the Petitioner is the brother of the said intestate and is entitled to have Letters of Administration to the estate of the said intestate issued to him unless the Respondent or any other person shall on or, before the 29th day of August 1902 show sufficient cause to the satisfaction of the Court to the contrary.

Signed this 22nd day of July 1902. | W. R. B. SANDERS. District Judge.

## Local and General.

**Weather.** We have had a few showers here and there, but not generally. Farmers are sowing paddy in the low lands. The days are cloudy and threatening and rain cannot be far off We need it badly.

**Missionary.** Rev. and Mrs. Jacob Thompson have returned from their brief visit to England and resumed duties at St. John's College. Misses Case and Beeching have gone on a missionary tour in the Wanny.

**Jaffna College.** Rev. and Mrs. John Bicknell are due in Colombo Monday morning the 1st Prox. and will be up here a few days later. The College closes tomorrow for a fortnight's holidays. The annual prize distribution will take place about the middle of September.

**Communication.** Letters from Pt. Pedro and Mullativoe *re* the coronation came to hand just as our last issue had gone to press. We regret that they were not in time. Send your communications so that they may reach the Editor not later than Monday of the weeks during which the Star is published.

**Y. M. C. A. Jaffna Town** A Magic Lantern lecture was given by Rev. E M. Weaver on the 25th Inst. in the Central College Hall, Admission was by tickets and the proceeds went to aid the Y. M. C. A. work in the Town. *Com.*

**An Accident.** A man drunk was killed by the ballast train near Koddikamam on the 25th Inst.

**Railway.** From the 15th Prox the train will run from Kangasanturai up to Pallai. *Com.*

**Postal.** Mr. M. P. Samarasingham from Kandy will take up work at Jaffna and Mr. R. J. Nicholas from Jaffna will proceed to Kandy.

**Marriages.** On the 27 Inst. Mary Helen daughter of Mr. Strantenberg, Proctor, was married to Mr. H. G. de Rooy. Mr. de Rooy is said to be a Dutchman and he was a prisoner of war, stationed at Jaffna.

Another marriage was to take place on the 4th Prox, between Mr. Changarapillai, a son of Mr. R. Mailvakanam Proctor and Miss Thangapillai daughter of Superamaniam of Mallagam. *Com*

**Personal.** Mr. A. M. Chittampalam Broker, Colombo, has come to Jaffna on a land case to which he is a party. Mr. L. S. A. Evarts a son of the late Dr. Evarts of Sandilippai has passed the qualifying examination for Magistracy. He is at present a clerk in the Audit Office Colombo. *Com.*

**Temperance Committee.** The movement started towards the end of last year has been brought into working order and we are glad to learn that the Committee appointed in the Public Meeting in October last in St. Peter's Church, Vampadi, met on the 21st Instant in the Mission house Vampadi. The draft rules of the constitution framed by Isaac Tambiah Secretary were approved and they will be printed in due time and circulated. Arragements have been made to fix Centers for the formation of branch Associations, and a committee of 25 was appointed. Messrs Advocates Kanagasapai Thirunavatkarasor and Isaac Tambiah, Proctor, Cooke, Messrs J. K. Chanmugum B.A and L. Spenser B.A. and Revs. Weaver and Appapillai were at this first meeting of the Committee. *Com.*

**Coronation Dinner** Sir William Twynam K.C.M.G. gave a dinner in honor of the King's coronation on the 19th Inst. About 30 guests were present and the event passed off very pleasantly. The toasts were The King and The Queen, and were enthusiastically taken. Sir William was present in London at the the coronation of Queen Victoria, and was present also when the announcement was made of the birth of a Prince, our present King.

He has been first and foremost in all the coronation celebrations in Jaffna.

**Criminal Sessions S. C.** Judge Grenier arrived by steamer on the 24th inst with Mr. Daniels Deputy Registrar, Mr. W. Drieberg Crown Counsel, and K. C. Kadirkamar Mudaliar. The work of the Sessions began on the 25th Instant. The first case taken up for trial was against four prisoners charged with attempting to commit murder and causing hurt with the knife. The first of the prisoners was Ratnasingham Sinnatamby and the other three are his brothers. On the day of the death of their grand-mother, these fellows appear to have had a dispute about the interminable rival claim to the management of the Manippai Maruthadi temple with their cousin Sapapathy the injured man. The latter was severely handled by the four brothers. The prisoners were found guilty and the first man was sentenced to undergo rigorous imprisonment for sevec years and two of the brothers to two years each, and one to one year.

The second case heard was against Mr. Melville Geddes for criminal breach of trust. Mr. Advocate Van Langenberg from the Colombo bar defended Mr. Geddes. Messrs H. Creasy and Berty Geddes brother of the accused were examined for the prosecution on Tuesday and further hearing was postponed for Wednesday.

The other cases for trial were three of which one was for kidnapping a girl, the other was from Cheviatero for robbery and the last one from Nallor for causing hurt with intent to murder. *Com.*

**Proctors' Final.** Fourteen candidates have passed the Final Examination for D. C. Proctor. Mr. N. Valupillai a nephew of Mr. Tampoo, Magistrate and Mr. Strong of Araly, are among the successful students.

**Educational.** The attention, of the teachers and managers of our Schools and Colleges, is invited to a defect of our youth in English. This defect has been chiefly poined out by the examiners for the recent English University Scholarship. The falling off of our lads in English is at once seen not only in the English University examinations but also in the Indian University examinations. It therefore deserves the most careful study on the part of those who have the management of our educational institutions. *Com.*

**Coronation at Singapore.** We quote from a private letter, "Mr. A. Annamalai of Singapore fed 5000 poor people including Malays, Chinese, Tamils, Klings, and Sinhalese. For two days rice giving was continued. The Estate and the Big Bungalow (Mr. A. A's) were decorated in a very grand style with colored flags etc. The cost of feeding and other expenses came to $2,000."

# உ த ய தா ர கை.

நீதி இராச்சியத்தாரை உயர்த்தும், பாவமோ எந்தச் சனங்களுக்கும் இகழ்ச்சி.

௬௨ம் புத்தகம்.] யாழ்ப்பாணம், ௧௯௦௨ம் ௵ ஆவணி ௴ ௨௮௳ வியாழக்கிழமை. [சங்கியை ௧௮



## இலங்கைப் புகைக்கப்பற் கொம்பனியாரின



புகைக்கப்பல்கள்பின்வரும் தேதிகளில்கொழும்புக்குப்போகவிருக்கின்றன.

| | |
|---|---|
| கோடன்காங்கேசன்றுறையிலிருந்து பருத்தித்துறைவழியாக | 1902. புரட் ௴ 8௳ |
| | " " 22 |
| அவலக் காங்கேசன்றுறையிலிருந்து பாம்பன்வழியாக | " " *2 |
| | " " 16 |
| | " " 30 |

Wm Mather & Son. Agents

### விளம்பரம்.

சாவகச்சேரி தெற்கில் இருக்கும் நவசிவாயம் பொன்னம்பலம் ஆகிய நான் சகலருக்கும் அறிவிப்பது. எனது பெண்சாதி சின்னத்தம்பி மகள் தெய்வானை என்னுடன் ஒன்றரைவருஷக் காலமாகக் கூடிச் சமாதானமாயிருந்து சென்ற ஆனிமாசம் அளவில் என்னை விட்டுப் பிரிந்து அடாத்தாய் பிறம்பாய் இருக்கிறு. இவ்விதமாய்இருந்து தன் சுற்றத்தாருடன் சேர்ந்து என்னைத் தொந்தரவு செய்வதே எண்ணம் என்று கேள்விப்படுகிறேன். ந. பொன்னம்பலம்.

சாவகச்சேரி-11. ஆவணி 02.

### விளம்பரம்.

யாழ்ப்பாணக் கிறிஸ்த சமரட்சணசங்கத்தின் 10 ம் வருடாந்தக் கூட்டம் இவ்வருடம் புரட்டாதி மாதம் 18 ந் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு வேம்படி மத்தியகல்லூரிமண்டபத்தில் வைக்கப்படும்.

S. A. Edward. B. A. L. T.
Secretary.

### விளம்பரம்.

காரைதீவு கிழக்குக் குடி இராமனுதர் அம்பலவாணனுகிய நான இத்தாற் சகலருக்கும் அறிவிக்கிறதாவது. காரைதீவு மேற்குக் குடி கனகர் சிதம்பரி என்பவர் தனது முதுசொமாட்சியான காணி வலந்தலையிறை குமாரன் வெளன் ஆள்விபேரிற் தோம்பு சூரியன் உப்புத்தரை [illegible] இலை இலாச்சம் ஒன்றரையில் தனது பங்கு முக்காற்பரப்பையும் எனக்கு அறுதியாக விலைபேசி என்னிடத்தில் 1884 ம் ஆண்டு ஐப்பசி மாதம் 4 ந் திகதி காசு ரூபா பத்தும் வாங்கிக் கொண்டு என்னை ஆட்சியில்விட்டிருக்கிறுர். ஆகையால் அந்தக் காணியை ஒருவராகுதல் வாங்கப்படாதென்றும் எந்த நொத்தாரிசாவது இந்த ஆதனத்தின்பேரில் யாதொரு சாதனமும் பிறப்பிக்கக்கூடாதென்பதையும் அறிவிக்கிறேன்.

இப்படிக்கு, இ. அம்பலவாணன்.

௧௯௦௨ ம் ௵ ஆடி 15 திகதி. காரைதீவு கிழக்கு.

### பாலைமரம்.

இதன்கீழ்க் கையொப்ப மிட்டிருப்போரிடம் முதற்தரமான பாலைமரம விற்பனவுக் கிருக்கிறது. விலை முதலிய விபரங்களறிய விரும்புவோர் அவர்களிடம் விசாரித்துக் கொள்ளவும்-

William Mather & Son.

### விளம்பரம்.

உடுப்பிட்டிக் கோவிற்பற்றைச்சார்ந்த வல்வெட்டிக்குறிச்சி வேலுப்பிள்ளை கைம்பெண் சிவகாமனுகிய நான் யாழ்ப்பாணப்பகுதியை வாசஸ்தானமாகக்கொண்ட நொத்தாரிசுமாரனைவர்க்கும் அறியத்தருவது யாதெனில்.—அல்வாய் மேற்குக் காலஞ்சென்றுபோன நொத்தாரிசு கதிர்காமர் சிதம்பரனுதர்முகதாவில் என் பேரில் ௧௯ ம் இலக்கத்தில் முடிந்த சீதனவுறுதிப்பட்ட ஆதனங்கள் சிலவற்றை யான் கைக்கிறுகாரியாயிருப்பதால் சிலர் கள்ளவுறுதிமுடிப்பதற்கு யோசித்திருக்கின்றுர்கள். இன்றுதொடக்கம் எந்த நொத்தாரிசாவது இவ்வித சாதனத்தைச் செய்து எனக்கு நட்டத்தையுண்டுபண்ண எத்தனிப்பரேல் அவருக்கு விரோதமாக நான் கோட்டார் முன்னிலையிற் பிராதுசெய்ய நிச்சயித்திருக்கிறேன். மேலும் நான் எனது சீதனக்காணியை யாருக்காவது இனிமேற் கையளித்தற்குமுன் கோட்டார் முன்னிலையில் அல்லது பத்திரிகைகள் மூலமாகப் பிரசித்தம்பண்ணியே யச்சாதனத்தை நிறைவேற்றுவேனென்பதையும் இத்தாலறிவிக்கிறேன்.

இங்ஙனம், கைக்கிறு+வே. சிவகாமன்.

வல்லுவெட்டி 1902 ம் ௵ ஆவணி ௴ 18 ௳.


### விளம்பரம்.

(Extract from the "Ceylon Government Gazette" No. 5,869 of August 8,1902.)

பிரசித்தநொத்தாரிமாராகும்பொருட்டு அதற்கென்று திருபிக்கப்பட்ட பொருத்தனைகளுக்குஉடம்பட்டுவேலைபழக விரும்புவோரைப் பரீட்சித்தற்காய் விதிக்கப்பட்ட பிரதமபரீட்சை, ௧௯0௩ ம் ஆண்டு சித்திரை (எப்பிறில்) ௴ ௨௧ ம் தேதியிலும் அதனையடுத்துவருந்தினங்களிலும் இலங்கை வித்தியா கர்த்தர் அவர்களால் கொழும்பில் "அக்கிறிக்கல்ச்சறல் ஸ்கூல்" எனப் பெயர்பெறும் கிருஷிக வித்தியாசாலையில் நடத்தப்படும்.

௨ வது.—அப்பரீட்சைக்குரிய கல்விவிஷயங்களாவன: அவரவர்தொழில்புரியத் தெரிந்துகொண்ட பாஷையில் கணிதம், இலக்கணம், வாசினை, வாசகஞ்சொல்ல எழுதல், முகவுரை வாக்கியம் ஒன்று கொடுக்க அத்தைப் பீடிகையாக்கி வசனம்தொடுத்தல்என இவையே பரீட்சித்தற்கான விஷயங்களாகும்.

௩ வது.—குறித்த பரீட்சைகொடுக்கும் கருத்துடையர் ஒவ்வொருவரும் தம்மைப் பரீட்சைக்குச் சேர்க்கும்பொருட்டுத் தேசாதிபதியவர்களுக்கு விண்ணப்பம் செய்ய மூன்று மாசத்திற்கு முன்னரே தாம் குடியிருக்கும் மாகாண அரசாட்சி ஏஜென்று அவர்களிடம் அக்கருத்தை அறிவித்துவைத்தல் வேண்டும். அவ்வாறு அறிவிக்கும்போது நொத்தாரித்தொழில்புரியத் தாம்தெரிந்தகொண்ட பாஷை யாது, ஊர்ப்பகுதியாது என்பவற்றை அவ்வறிவித்தலிற் சுட்டிக்காட்டல் வேண்டும். அது முதலாகப் பூரணமாக மூன்று மாதம் கழிந்தபின்பே பரீட்சைக்குச் சேர்க்கும்படி விண்ணப்பம் அனுப்பல்வேண்டும்.

௪ வது.—இவ் விண்ணப்பப்பத்திரம் தேசாதிபதியவர்களுக்குச் சமர்ப்பிக்கும் (பெட்டிசம் என்னும்)மனுப்பத்திரம் மாதிரியாய் அங்கிலேய பாஷையில் எழுதல்வேண்டும்,

அதில், (1) குடியிருக்கும் அவர் ஊரின் பெயர்யாது?

(2) அவரின் வயது எத்தனை?

(3) வேலைபழகும்பொருட்டு அவர் சேவிக்கக் கருதியிருக்கும் "அற்வக்கேற்," அல்லது "புறக்றர்" எனும் நியாயதுரந்தரரின் பெயர் யாது?

(4) நொத்தாரித் தொழில்புரியத் தெரிந்துகொண்ட ஊர்ப்பகுதி யாது? பாஷை யாது? என்ற இவை முதலிய விபரங்களை அடக்கிக் காட்டல்வேண்டும்.

௫ வது.—மேலே ௩ ம் பிரிவிற் குறித்த வண்ணம்அரசாட்சிஏஜன்றுஅவர்களுக்கு அறிவித்தல்கொடுத்ததன்பின், அவர் அதை ஏற்றுக்கொண்டோம் என விடையாயனுப்பிய கடிதத்தையும், நன்னடை வித்தியாதிறமைகளைக் குறித்துச் சாட்சிபகரும் சிபாரிசுப்பத்திரங்களையும் இதற்கு முற்பிரிவிற் சொல்லப்பட்ட விண்ணப்பப்பத்திரத்தோடு அணைத்தனுப்பல் வேண்டும். அனுப்பும் நற்சாட்சிப்பத்திரங்கள் பலவுள், அன்றுமுதல் மூன்று மாசத்துக்கு மேற்படாத தவணைக்கிடையில்எழுதப்பட்டுள்ள நற்சாட்சிப்பத்திரம் ஒன்றேனும்அணைத்தனுப்பல்இன்றியமையாஆவசியகம்எனக்கொள்க.

௬ வது.—தேசாதிபதி அவர்களுக்கனுப்பும் விண்ணப்பபத்திரம் அங்கிலேய பாஷையில் எழுதப்படல்வேண்டும். ஆயினும் சிங்களம், தமிழ், அல்லது இரண்டிலும் நொத்தாரித் தொழில்புரியுங் கருத்துடையாராயிருப்பின், அங்கிலேயபாஷையில் எழுதியனுப்பும் விண்ணப்பப்பத்திரத்தோடு தாம்தொழில்புரியத் தெரிந்துகொண்ட பாஷை ஒவ்வொன்றிலும் ஒவ்வொருவிண்ணப்பப்பிரதியைக் கூடச்சேர்த்தனுப்பல் வேண்டுமெனக்கொள்க.

௭ வது.—எந்த எந்தப் பாஷையில் தொழில்புரியக் கருதியிருக்கின்றனரோ அந்த அந்தப் பாஷையில் அனுப்பும் விண்ணப்பப்பத்தரமும் அவர் சொந்தக் கை எழுத்தில் எழுதி அனுப்பல்வேண்டுமென அறிக.

௮ வது.—மேற்படி பரீட்சைக்குச் செல்லும்பொருட்டுத் தேசாதிபதியவர்களின் அநுமதியைப் பெற்றுக்கொண்டால், அவ்வநுமதிப்பத்திரத்தையும் பரீட்சைக்கென நிருபித்த விகிதப்பணம் இரண்டரைரூபாயையும் ௧௯0௩ ம் ஆண்டு பங்குனி (மாட்ச்) ௴ ௪௩ ம் தேதிக்குப் பிந்தாமல். ஒருங்கே இவ்வேலைத்தலத்துக்கு வந்துசேரும்படி "றெஜிஸ்ற்றிறுர் ஜெனறல்" அவர்கள் மேல்விலாசத்துக்கனுப்பிவைத்தல் வேண்டும்.

௯ வது.—தேசாதிபதியவர்களின் அநுமதியைப்பெற்றுக்கொண்டோரைவிபரங்கேட்டு, அவ்வனுமதிபெற்றோம்என்போர் அவர்தானு என நிச்சயப்படுத்தும்பொட்டும் பரீட்சைக்குச்செல்லும் வண்ணம் உத்தரவுச்சீட்டைப்பெற்றுக்கொள்ளும்பொருட்டும் 'றெஜிஸ்ற்றிறுர்ஜெனறல்" அவர்கள் வேலைத்தலத்திற்கு அவ்வநுமதி பெற்றவர் எல்லோரும், ௧௯0௩ ம் ஆண்டு சித்திரை (எப்றல்) ௴ ௨௪ ம் தேதியில் அல்லது ௨௫ ம் தேதியில் வந்து தோற்றப்படல் வேண்டுமென்றறிக.

பொ. அருணசலம். காணிப்பதிவுக் காரியஸ்தர்.
காணிப்பதிவுக் காரியகர்த்தரின் வேலைத்தலம்,
கொழும்பு ௧௯0௨ ம் ௵ ஆவணி (ஆக்ஸ்ட்) ௴ ௧ம் ௳.

## உ த ய தா ர கை.

### ௧௯0௨ ம் ௵ ஆவணி ௴ ௨௮ ௳

### இலங்கை வித்தியாநிலை.

### The Report of the D. P. I. for 1901.

1901 ம் ஆண்டிலே வித்தியாவிஷய சம்பந்தமாய்இலங்கையில் நடைபெற்ற காரியங்களைப்பற்றி, வித்தியாகர்த்தர் மெஸ். எஸ். எம். பறேஸ் எம். ஏ. அவர்களெழுதி வெளிவிட்டிருக்கும் றிப்போட்டு, உபயோகமான பலவிஷயங்களை யடக்கியிருக்கின்றது.

1901 ம் ஆண்டிலெடுக்கப்பட்ட கணக்குப்படி இலங்கைக் குடிசனமொத்தம் 35 65,954. இதில் 8.56,310 பேர் பள்ளிக்கூடத்துக்குப்போகிறதற்குரிய (அதாவது 5 க்கும் 15 க்கு மிடையான) வயதினராயிருக்கின்றனர். இவர்களில் 2,18,479 பேர்மாத்திரம் பள்ளிக்கூடத்துக்குப் போகிறவர்களாயிருக்கின்றனர். ஆகவே இலங்கையிலே பள்ளிக்கூடஞ்சென்று படிக்கவேண்டியபிள்ளைகளில் முக்கால்வாசிப்பேரும் அப்படிச் செய்யாதவர்களாயிருக்கின்றனரென்பது வெளிப்படை.

பள்ளிக்கூடங்களின் தொகை.

இலங்கை வித்தியாபகுதியாரின்கீழாய் நடைபெறும் அரசாட்சிப் பாடசாலைகள் 503. அவற்றிற் கல்விகற்கும் மாணவர் தொகை 53,834 வரவுக்கு மேலதிகமாய் இவர்களுக்காக அரசாட்சியார் செலவுசெய்யும்பணத்தொகை 2.84,473 ரூபா. அரசாட்சியாரிடமிருந்து சகாயப்பணம்பெறும் உதவிநன்கொடைப் பாடசாலைகள் 1407. அவற்றிற் கற்கும் மாணவர்தொகை 1,29,427. இவர்களுக்காய் அரசாட்சியார் கொடுக்கும் சகாயப்பணம் 4,61,206 ரூபா. அரசாட்சியாரின் சகாயஞ் சிறிதுமின்றித் தன்னிட்டமாய் நடைபெறும் பாடசாலைகள் 2062. அவற்றிற் கற்கும் மாணவர்தொகை 35,218. இவைகளின் செலவைப்பற்றி அரசாட்சியாருக்கு யாதொன்றுந் தெரியாது. ஒரு பிள்ளை அரசாட்சிப்பாடசாலையிற் படிப்பதற்காக 5½ ரூபாவும் உதவிநன்கொடைப்பாடசாலையிற் படிப்பதற்காக 3½ ரூபாவும் அரசாட்சியாருக்குச் செலவாகின்றது. இலங்கையின் முழு அரசிறைவருமானத்தில் முப்பதிலொருபங்கைமாத்திரம் அரசாட்சியார் வித்தியாவிஷயத்திற் செலவழிக்கின்றனர். 1901ம் ஆண்டில் வித்தியாபகுதியாராற்செலவுசெய்யப்பட்ட பணம் 9,07,595 ரூபா.

பாடஒழுங்கு.

பாடசாலைகளுக்குக் குறிக்கப்பட்டிருக்கும் பாடஒழுங்கு, வசதிக்கேற்கத் தெரிவுசெய்தற்கிடமின்றி எங்கும் எல்லோர்க்கும் ஒரேமாதிரியாயிருப்பது தகுதியன்றென்பது வித்தியாகர்த்தரின் அபிப்பிராயம். அதைப்பற்றியவர் கூறுவது: 'எல்லாருந் தமது தேவைக்கேற்கத் தெரிவுசெய்தற்குப் போதியவித்தியாசமான பாடஒழுங்குகளிருக்கும்போதே எமது வித்தியாசட்டம் நல்லதாயிருக்கும். முதலாவதாய்க் கணிதவிஷயத்தைத்திருத்தத்திற்குக்கொண்டுவந்திருக்கின்றேம். இவ்விஷயத்திற் புதுமாதிரியானவோரொழுங்குண்டாக்கி 1901 ம் ஆண்டின் வித்தியாசட்டத்தில் வெளிப்படுத்தினேம். ஆயினும் அது கீழ்நிலையிலிருக்கும் சில நாட்டுப்பள்ளிக்கூடங்களுக்குக் கடுமையாயிருக்குமெனத் தோற்றினமையால் அப்படிப்பட்ட பள்ளிக்கூடங்களுக்காக மிக இலகுவான பின்னேர்ஒழுங்கை யுண்டாக்கியிருப்பதுமன்றி, முந்திய ஒழுங்கை அனுசரிப்போர் கூடியஅளவான உதவிநன்கொடைப்பணம்பெறவும் வசதிபண்ணியிருக்கின்றேம்,கணிதப்பாட ஒழுங்கைப்பற்றி முறையிட்டவர்களாகிய பாடசாலைமனேச்சர்மாருக்கு இது திருத்திகரமாயிருக்குமென்பது எமது நம்பிக்கை''

திரண்ட பணச்சகாயம்.

பாடசாலைகளிலே சோதனைகளின் தொகை கூடியளவு குறைக்கப்படல்வேண்டுமென்பதும். அவைகள் பள்ளிக்கூடத்தின்நிலையை எப்போதுஞ் சரியாய்க் காட்டக்கூடியனவன்றென்பதும், பிள்ளைகள் ஒவ்வொருவரையும் ஒவ்வொருபாடத்திலுஞ் சோதனைபண்ணி வரும்பெறுபேற்றுக்குத்தக்கதாய் உதவிநன்கொடைகொடுக்கும் பழய வழக்கம் மிக நன்றன்று என்பதும், இவ்வழக்கத்தினுலே உபாத்திமார் தமது பாடசாலையின் நிலைபரத்துக்குத்தக்கதாய்ப் பாடங்களை ஒழுங்குப்படுத்தி, பிள்ளைகளை அவர்களின் அறிவுக்குத்தக்கதாய் வகுப்புகளில் ஏற்றியுந் தாழ்த்தியும் விட்டுப் படிப்பிக்கும் இட்டமில்லாதிருக்கின்றனரென்பதும், வித்தியாகர்த்தரின் கருத்து. இங்கிலந்திலே இப்போது ஒவ்வொரு பிள்ளையையுஞ் சோதனைபண்ணிப் பணங்கொடுக்கும்வழக்கம் நிறுத்தப்பட்டாயிற்று. வித்தியாதரிசிகள் இடைக்கிடை பள்ளிக்கூடங்களுக்குச் சென்று உபாத்திமார் படிப்பிக்கும்மாதிரியைப் பார்வையிட்டுத் தாமுமேதாயினுமோர்வகுப்பை மாதிரிக்குச் சோதனைபண்ணுகின்றனர். இலங்கையிலே எங்கும் உபாத்திமார் போதிய அறியும் அனுபவசாதனைப் பயிற்சியும்பெற்றவர்களா யிருக்கவில்லையாகையால் இம்முறையையுடனேயனுசரித்தல் புத்தியன்றென்பது வித்தியாகர்த்தரினபிப்பிராயம். இப்போது மாதிரிக்காய் இவ்விசேஷ உதவிநன்கொடைப் பாடசாலைகள் மூன்றமாத்திரமெடுத்து, முதல் நான்குதரங்களையும் வழமைபோலப் பரீட்சிக்கவும், நாலுக்குமேற்பட்ட தரங்களுக்கு அவைகளிலுள்ளபிள்ளைகளின் வரவையும், இடைத்தரிசனைகள் சோதனைகளில் அவர்களிற் காணப்படும் பொதுத் தேர்ச்சியையுங் கவனித்துத் திரண்ட வோர் தொகைப்பணத்தை உதவிநன்கொடையாய்க்கொடுக்கவும் ஒழுங்குசெய்யப்பட்டிருக்கின்றது. குறித்த சில சோதனைகளில் நல்லனுகூலம். போதிய பாடங்கள். போதிய உபாத்திமார், அங்கீகாரம்பெற்ற நேரசூசி, வித்தியாதரிசியின் நல்ல றிப்போட்டு, இவைகள் திரண்டதொகைப்பணம்பெறுவதற்கு வேண்டிய காரியங்களாம். மாதிரிக்காகமேல்மாகாணத்திலும் தென்மாகாணத்திலுமுள்ள ஒன்பது அரசாட்சிச் சுதேசபாடசாலைகளிலும், குறைந்தபட்சம் இரண்டு வருடங்களுக்கு உபாத்திமார் தம் இஷ்டப்படி வகுப்புகளையும் பாடங்களையும் ஒழுங்குப்படுத்திப் படிப்பிக்கும்படி விடப்பட்டிருக்கின்றனர். வித்தியாதரிசிகள் இடைக்கிடை சென்று, படிப்பிக்கும் முறைகளைக் கவனித்து, மாதிரிகாட்டிச் சிலபாடங்களைச் சோதனைபண்ணுவர். குறித்த இரண்டு அல்லது மூன்றுவருடக்கடைசியில் வழமையான பூரணசோதனை நடத்தப்படும். படிப்படியாய்

இம்முறை, தகுதியென்றுகாணப்படும் மற்றும்சுதேசபாடசாலைகளிலும்அனுசரிப்புக்குக்கொண்டுவரப்படும்.

உபாத்தியாக்கற்சாலைகள்.

இலங்கையிலே வித்தியாவிஷயம் நயமடைவதற்கு, சரியாய்ப் பயிற்றப்பட்டோர் உபாத்திமாராயேற்படல் வேண்டுமென்றும், உதவிநன்கொடைப் போதனுசாலைகளின் நிலைபரம் தமக்குத் திருத்திகொடுக்கவில்லையென்றும்,பணக்குறைவுகாரணமாய்த் தகுந்த உபாத்திமாரில்லாதிருத்தலே அவற்றின் குறைவுக்குக் காரணமென்றும், அரசாட்சியாரின்கீழ் நடைபெறும் உபாத்தியாக்கற்பாடசாலைகளில் தகுந்த உபாத்திமாரும், தகுந்த உபகரணங்களுமிருக்கின்றனவென்றும் வித்தியாகர்த்தர் கூறுகின்றனர். கொழும்பில் ஸ்தாபிக்கப்படப்போகிற இங்கிலீஷ போதனுசாலையிற் பயிற்றப்படுவோர் உதவிநன்கொடை இங்கிலீஷ பாடசாலைகளுக்குத்தகுந்த உபாத்திமாராவரென்பதும், உதவிநன்கொடைச் சுதேசபாடசாலை உபாத்திமார்களும் அரசாட்சிச் சுதேச போதனுசாலைகளிற் சற்று அவற்றின் நயத்தைப் பெறல்வேண்டுமென்பதும் வித்தியாகர்த்தரினபிப்பிராயம். இனிமேல்,எவ்வளவு அதிகமாய்ப் பள்ளிக்கூடங்களின்தொகையும்பிள்ளைகளின்தொகையும்பெருகுகின்றன வென்பதல்ல, எவ்வளவு நல்லமாதிரியாய்ப் பிள்ளைகள் படிப்பிக்கப்படுகிறார்களென்பதே அரசாட்சிவித்தியா பகுதியாரின் கவனமாயிருக்குமாம்.

விடுதிப் பெண்பாடசாலைகள்.

சுதேச, அங்கிலோ சுதேச விடுதிப்பெண்பாடசாலைகள் மிகத் திருத்திகரமான நிலையிலிருக்கின்றனவென்றும், மற்றும் உதவிநன்கொடைப்பாடசாலைகளில்ஒவ்வொரு பிள்ளைக்காய் 3½ ரூபாய் செலவுசெய்யும் அரசாட்சியார், விடுதிப்பெண்பாடசாலைகளில் ஒருபிள்ளைக்காய்ச் சராசரி 18½ ரூபாய் செலவழிக்கின்றனரென்றும், பெண்பிள்ளைகளின் தையல், கீதம், சரீராப்பியாசம், ஆகியவற்றைப் போதியமாதிரியாய்க் கவனித்துத் திருத்தங்கள் செய்யவும், அவர்களுக்குள் நல்லெண்ணத்தையும் அனுதாபத்தையும் பிறப்பித்தற்குமோர்பெண் வித்தியாதரிசி நியமிக்கப்படல்வேண்டுமென்றும் வித்தியாகர்த்தர் கூறுகின்றனர்.

கைத்தொழிற் பாடசாலைகள்.

வருடவீதம் 17,260 ரூபாவரையிற் கைத்தொழிற் பாடசாலைகளுக்காய்ச் செலவழிக்கப்படுவதால், அவற்றின் தொழில்களைப் போதிய அளவாய்ச் சோதனைபண்ணி நயநட்டங்கூறித் திருத்தங்களையுண்டாக்குவதற்கு இத்தொழில்களில் விசேஷ பயிற்சியடைந்த ஒருவர் வித்தியாதரிசியாய் நியமிக்கப்படல்வேண்டுமென்பதும் வித்தியாகர்த்தரின் கருத்து.

உயர்தரக் கல்வி.

சென்ற இரண்டோர்வருடங்களாய் இலங்கையில் உயர்தரக்கல்வியை என்னவகையாய் நயப்பித்தலாம் என யோசனைபண்ணிய வித்தியாகர்த்தர் கடைசியாய் லண்டன் சர்வகலாசாலைப் பரீட்சைகள் இலங்கையிலும் நடைபெறச்செய்வதே தற்போதைக்கு உத்தமமான காரியமென முடிவுகட்டிவிட்டனர். இந்திய சர்வகலாசாலைகளின் பரீட்சைகள் இலங்கைக்கேற்றன வல்லவென்பதும், புதிதாயோர் சர்வகலாசாலையுண்டாக்குவதற்கு இலங்கையோர் தகுந்தஇடமன்றென்பதும் வித்தியாகர்த்தரின் தீர்மானம்.

## புதிய மந்திரிமார்.
## The New Cabinet.

இங்கிலாந்தின்பிரதமமந்திரியாராயிருந்த லோட் சலிஸ்புரி பெருமான் வேலையைவிட்டபோது, அரசிறைவிஷய ஆலோசனை மந்திரியாயிருந்த சேர். மைக்கேல் கிக்பீச் என்பவரும் வேலையைவிட்டமையால், 'கபினெற்' என்னும் மந்திரிமார் சபையிற் பலமாறுதல்கள் நடைபெறலாயின. மந்திரிமாரின் நாமங்களும்அவர்களின் உத்தியோகங்களுமாவன.

மெஸ். ஆதர் யேம்ஸ் பால்வோர்— பிரதமமந்திரி, பொக்கிஷாதிபதி, இராச முத்திரைப் பாதுகாவலர்.

லோட் கால்ஸ்புரி—மகா நியாயாலோசனை மந்திரி.

டியூக் அவ் டெவொன்ஷியர்—மந்திரசபாநாயகர்.

மெஸ். எக்கேஷ. டொர்லஸ்—சுதேச காரிய மந்திரி.

லோட் லான்ஸ்டவுன்—பிறராசாங்ககாரிய மந்திரி.

மெஸ் யோசெவ் சேம்பளேன்- கலனிகளின்மந்திரி

லோட்கமிலற்றன்—இந்திய மந்திரி

மெஸ்.சேன்யோன் புறொடிறிக்—யுத்தகாரியமந்திரி

லோட் செல்போண்—கடல்ராணுவ மந்திரி.

மெஸ். றிச்சி—அரசிறைக் காரியமந்திரி

லோட் அஷ்போண்—அயர்லந்து நியாயாலோசனை [மந்திரி.

மெஸ். உவின்டாம்—அயர்லந்தின்காரிய மந்திரி.

லோட் பால்வோர்—ஸ்கொத்லந்தின்காரிய மந்திரி.

மெஸ். ஜெறல்ட் பால்வோர்-வர்த்தகமந்திரி

மெஸ். உவால்றர் லோங்—உள்ளூர் ஆளுகைச் சபா [மந்திரி.

மெஸ். கான்புரி—கிருஷிககாரியமந்திரி.

லோட் லண்டன்டெரி—வித்தியாவிஷய மந்திரி.

மெஸ் ஒஸ்றின் சேர்பளேன்—தபாற்காரியமந்திரி.

மேற்கூறிய மந்திரிமாருள் மிகுதியானோர் முந்தியே இவ்வுத்தியோகங்களிலிருந்தும், இவ்வுத்தியோகங்களிலிருந்தோர்க்குதவிவிகிதர்மாராயிருந்தும்,அவ்வப்பகுதியில் அனுபவப்பட்டவர்களாகையால், மந்திரசபை அதி பெலங்கொண்டதென்பது பலரின் அபிப்பிராயம். மெஸ். ஆதர்பால்வோர், மெஸ. ஜெறல்ட் பால்வோர் என்பவர்கள் சகோதரர். லோட் சலிஸ்புரி பெருமானின் சகோதரிபுத்திரர். லோட் செல்போண், லோட் சலிஸ்புரிபெருமானின் மருகர் இவர்கள் முந்தியே மந்திரிமாராயிருந்து பிரசித்தி பெற்றவர்கள். மேற்கூறிய நியமனங்களுள், கலனிகளின் மந்திரியாகிய மெஸ். யோசெவ் சேம்பளேனின் புத்திரரான மெஸ். ஒஸ்றின் சேம்பளேனின் நியமனமே புதிய நியமனமெனலாம். இவர் முன்னே பொக்கிஷமந்திரியாகிய மெஸ். ஆதர் யேம்ஸ் பால்வோரின் கீழ் உதவிலிகிதராயிருந்தவர். அங்கிலோராச்சியத்தின் " கபினெற் " என்னும் மந்திரிமார் சபையில் முன் ஒருபோதும் தகப்பனும்மகனும் ஒருமிக்கஇருந்ததில்லையாகையால்,மெஸ். சேம்பளேனும் அவரின் மகனும் ஒருமிக்க "கபினெற்" மந்திரிமாராயிருப்பது நல்லமாதிரியன்றென்பது சிலரின் அபிப்பிராயம். மெஸ். கிளாட்ஸ்ரோன் பிரதமமந்திரியாயிருந்தபோது அவரின்மகனுகிய மெஸ். கேபேட் கிளாட்ஸ்ரோனும், பாளிமேந்து சங்கத்தில் 14 வருட அனுபவசாலியாய் விசேஷம்பெற்று விளங்கினராயினும், அவரையோர் உதவிலிகிதராய் நியமித்ததேயன்றி மந்திரிமாருளொருவராய்நியமிக்கத் தந்தையார் விரும்பவில்லையாம்.

## யாழ்ப்பாணம்.

காலநிலை—.Weather—.மேகம் மந்தாரமாயிருக்க இடைக்கிடை யெறிக்கும் வெய்யில் மிகக் காரமாயிருக்கின்றது. காற்றும் விட்டு விட்டு வீசுகின்றது. ஊரிலே காய்ச்சல், வயிற்றுளைவு, என்னும் நோய்களின்னுங்காணப்படுகின்றன. கமக்காரர் வயல்களுக்குப் பயளையிட்டு விதைப்புக்கு மழையை நோக்கிக்கொண்டிருக்கின்றனர். நேற்றிரவு கச்சான்காற்றோடு கூடிவந்து சிறுமழையொன்று பெய்திருக்கின்றது.

சுப்பிறிங்கோடு.-Supreme Court.—சுப்பிறீங்கோட்டு நீதிவிசாரணை சென்ற 25ம்௨ திங்கட்கிழமைதொடக்கம் நடைபெறுகின்றது. நீதி விசாரணைக் கம்மிஷனராகிய மெஸ். யோசெவ் கிறெனியர் அவர்கள் நீதிபதியாயுட்கார்ந்து, மெஸ். டிறிபேக் என்பவரைஇரகசிய லிகிதராகவும், மெஸ். டானியெல் என்பவரைச்சக்கிடுத்தாராகவும், மெஸ். எம். டிறிபேக் என்பவரைமுடிக்குரியநியாய துரந்தரராகவும், மெஸ். கே. கி. கதிர்காமமுதலியாரைத் துவிபாஷிதராகவுங் கொண்டு விளக்கம் நடத்துகின்றனர். இம்முறை பாரப்படுத்தப்பட்ட வழக்குகள் ஐந்து.

முதலாவதாய் கொலைசெய்யஎத்தனித்தலும் ஊறுபாடுசெய்தலும் என்னும் மானிப்பாய்வழக்கு விளங்கப்பட்டது. மானிப்பாய்க்கோவிலோடு சம்பந்தப்பட்டவர்களாகிய ரத்தினசிங்கம் சின்னத்தம்பியென்பவரும், அவரின் சகோதரர் மூவரும் எதிரிகள். பாட்டியாரின் சாவீட்டிலே கோவிலுரித்தைப்பற்றி வாக்குவாதங்கிழம்ப இவர்கள் நால்வருங் கூடிச் சிறிய தந்தையாரான சபாபதியென்பவரைக் கத்தியாற் காயப்படுத்தினரென விளக்கத்திற் தெளிவாயிற்று. சின்னத்தம்பிக்கு ஏழுவருடமும், அடுத்த இருவருக்கு இவ்விரண்டுவருடமும், நான்காமவனுக்கு ஒருவருடமுங் கடும் ஊழியமறியல் விதிக்கப்பட்டது.

இரண்டாவதாய் நம்பிக்கைத்துரோகஞ்செய்தல்என்னும்வழக்குவிளங்கப்பட்டது. இதில் தோட்டத்துரையான மெஸ். மெல்வில் கெடஸ எதிரி. கொழும்பிலிருந்தழைக்கப்பட்ட அப்புக்காத்து வான்லங்கென்பேக் அவர்க்காய்த்தோற்றினர். வழக்குத் தள்ளப்பட்டது.

பெண்ணைச்சோரஞ்செய்தல்வழக்கில் எதிரிகள் நன்னடைப்பிணையில்விடப்பட, சிவியாதெருக் களவுவழக்குத்தளளப்பட்டது. நல்லூர் ஊறுபாடுசெய்தல் வழக்கு இன்னும்விளக்கத்துக்கிருக்கின்றது.

விவாகம்.—Matrimonial.— பருத்தித்துறையிலிருந்து காலஞ்சென்றுபோன ஸ்திரேஞ் அரசர்கோன்முதலியாரின் மகள் முறையினராகிய மிஸ் மேரி செல்லமென்பவளை மெஸ். டேவிற்சின்னத்தம்பி உபாத்தியாயர் சென்ற 18 ந் திகதி பாணிக்கிரகணஞ் செய்தனர். விவாகாராதனை,பருத்தித்துறைத்தேவாலயத்திலே சுற்றமித்திரர் பலர் சமுகமாயிருக்க கனம். ஒஸ்போண், கனம். சலோமோனபோதகர்களால் நடத்தப்பட்டது.

பிறக்தர் சாள்ஸ் ஸ்திரூன்றென்பேக்கின் மகளாகிய மிஸ். மேறி கெலின் என்பவளை, டச்சுவமிசத்தைச் சேர்ந்தவரும் போவர்மறியற்காரருளொருவராய் யாழ்ப்பாணம்வந்திருந்தவருமாகிய மெஸ் எச். டீறூயி என்பவர் சென்ற 27 ந் திகதி விவாகஞ்செய்தனர். தம்பதிகள் நீடூழி வாழ்க.

புதிய தாணிமார்.—New Proctors —இம்முறை நடைபெற்ற தாணிமார்க்குரிய கடைசிப்பரீட்சையிற்பதினறுபேர் சித்தியாயினர். இவர்களுள் மெஸ் தம்புரீதவானவர்களுக்கு மகன்முறையினரான மெஸ. என். வேலுப்பிள்ளை, அராலிவாசரான மெஸ். எம். ஸதிரேங் என்பவர்கள் யாழ்ப்பாணிகள்.

அவமிருத்து —Accident.—சென்ற 25ந் திகதி கொடிகாமத்திலே குடித்துவெறித்துநின்ற ஒருவன் கல்லேற்றிவந்த றெயில்வண்டிலால் நெரிக்கப்பட் டுயிர்துறந்தனனெனக் கேள்விப்படுவது துக்கம்.

புகைவண்டி.—Railway.—புரட்டாதிமாதம் 15 ந் திகதிதுவக்கம் புகைவண்டிகள் காங்கேசன்துறைக்கும் பழைக்குமிடையில் ஆட்கள் சாமான்களை யேற்றிப் போக்குவரவுசெய்யத் துவங்குமென அறிவிப்புக் கொடுக்கப்பட்டிருக்கின்றது.

நீர்வேலிக் கலகம்.—Neerveli Riot —நீர்வேலியிலே நளவர் றோமான் சமய கிறிஸ்தவர்களாகி இட்டமாய் நடக்கத் துவங்கியதைக் கண்டு உக்கிரங் கொண்டெழும்பிக் கத்தோலிக்க கிறீஸ்த கோவிலையும் பள்ளிக்கூடத்தையும் பிடுங்கி யழித்துக் குருமாரையுஞ்சருவினவர்களில் 25 பேர்வரையில்விளக்கிற் பிடிக்கப்பட்டுஆளுக்கு 500 ரூபா பிணைகொடுத்துநிற்கின்றனர். இன்னுஞ் சிலர்க்கு விளக்கு போயிருக்கின்றது. சென்ற 25 ந் திகதி துவக்கம் விளக்கம் நடைபெறுகின்றது.

மாதகற்கொலை—.Murder—மாதகலிலே அந்தோனி முத்தனென்னு மொருவன் தன் சகோதரனுக்கோர் பெண்ணை விவாகஞ் செய்ய முயற்சித்ததிற் குரோதங்கொண்ட அவன் பெண்சாதி வழியார் அவனைப் பாரதூரமாய் அடித்துக் காயப்படுத்த, அவன் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகப் பட்டபோது வழியிலே உயிர்துறந்தனன்.

தமிழர் பிரதிநிதி.—The Tamil M. L. C.—இலங்கைச் சட்ட நிருபண சபையிலே தமிழர் பிரதிநிதியாயிருக்கும் கௌரவ டக்தர் ஞெக்குவுட் அவர்களின் ஐந்துவருடகாலஎல்லை, வரும் பங்குனிமாதத்தோடு முடிவாகின்றமையால், புதிய பிரதிநிதியொருவரை நியமிப்பதற்கான காலங்கிட்டி வருகின்றது. முந்திய முறையிலே கிறிஸ்தவர்களுஞ் சைவரும் வெவ்வேறாய்ப் பிரிந்து அவரை நியமிக்க வேண்டும் இவரை நியமிக்க வேண்டுமென மல்லுக்கட்டத் தேசாதிபதியவர்கள் இருபகுதியாரையும் வெட்கப்படுத்தி விட்டமையால்' இம்முறை அதிக ஆரவாரம் நடவாதுபோலும்.

உபதேசாதிபதியின் சுற்றோட்டம்.—Governor on Circuit.—உபதேசாதிபதி மெஸ். இட்தேண் அவர்கள் இலங்கையின் மத்திய பகுதியைப் பார்க்கும் நோக்கமாக இந்தமாதம் 24ந் திகதிகண்டியிலிருந்துபுறப்பட்டு அடுத்தமாதம் 1ந் திகதி பொல்லனறுவையையும் 8ந்திகதி அனுராசபுரத்தையுஞ்சேர்ந்து, 11 ந்திகதி அனுராசபுரத்திலிருந்து புறப்பட்டு மதவாச்சியைத் தரிசித்து 16 ந் திகதி மன்னர் வந்து சேர்ந்து இரண்டு நாட்தங்கி 18 ந் திகதி கப்பல் மார்க்கம் கொழும்பு செல்வர்.

தேசாதிபதி திரும்பிவரல்.—The Governors Return-மகுடாபிஷேக கொண்டாட்டத்துக்குஇங்கிலந்துசென்றிருந்தவராகிய சேர் யோசெவ் றிட்சுவே தேசாதிபதியவர்கள் ஓஷானியா என்னுங் கப்பல் மூலமாய் இலங்கைக்குத் திரும்பிவர ஒழுங்குசெய்திருக்கின்றனர். அக்கப்பல் ஐப்பசி மாதம் 25 ந் திகதி வரையிற் கொழும்பு வந்து சேரும்.

தேகவியோகம்.—Obituary —யாழ்ப்பாணச் சுதேசியும் டிஸ்திறிக் கோட்டுத் தாணியாக கொழும்பிலே வேலைபார்த்த வருமாகிய பிறக்தர் மெஸ். முத்துக்குமாரு சென்ற 16 ந் திகதி கொழும்பிலே காலஞ்சென்றனரென்னுந் துக்கசங்கதி தந்தி மூலம் அறிவிக்கப்பட்டது.

முல்லைத்தீவிலே அரசாட்சி வைத்தியராயிருந்து சுகவீனத்தினிமித்தம் ஓர் சத்திரவைத்தியஞ் செய்விக்கும்படி கொழும்பு சென்றவராகிய டக்தர் யோன்பிள்ளை கொழும்பு ஆஸ்பத்திரியிலே சென்ற 22 ந் திகதி காலஞ் சென்றனரென்னுந் துக்கசங்கதி யெட்டிற்று.

மெஸ். எல். எஸ். எவ்வேட்ஸ்.—Mr. L. S. Evarts.—கொழும்பில் சோதனகர்த்தர் கந்[illegible]ல் வேலையாயிருந்து, சென்ற தைமாதத்தில் றிட்சு[illegible]சாதிபதியவர்களால் சிவில் சேவிஸ் உத்தியோக நிரைக்குத் தெரியப்பட்டவராகிய இவர், பொலீஸ நீதவான் மாராவோர்க்குவைக்கப்படும்பரீட்சையிற்சித்தியாயினரெனக் கேள்விப்பட்டுச் சந்தோஷ மடைகின்றோம். இவர் இலங்கைவைத்தியகல்லூரியில் வேலையாயிருந்து பிரசித்தி பெற்றுக் காலஞ் சென்று போன டக்தர் யேமஸ். எவ்வேட்ஸ எம். டி. என்பவருக்கும், இப்போது அம்மாபட்டினத்தில் இலங்கை அரசாட்சி வைத்தியராயிருக்கும் டக்தர் அல்பிறெட் எவ்வேட்ஸ எம். பி. சி. எம். என்பவருக்கும் சகோதரன். சீக்கிரத்தில் பொலீஸநீதவானுய் நியமனம் பெறுவர்.

மெஸ். எச். மூவர்.—Mr. W. H. Moor.—கொழும்பிலே உபரேகுத் தலைவராயிருந்த இவர் திருன்ஸவாலின் உதவிக்கொலோனியல் சக்கிடுத்தாராய் நியமனம் பெற்றுச்செல்கின்றனர்; ஆங்கேகொலோனியல் சக்கிடுத்தாராயிருக்கும் மெஸ. டேவிற்சனும் இலங்கையிலிருந்து சென்றவரேயாம். போவர் நாடுகளுக்கு இலங்கையிலிருந்து விசேஷ உத்தியோகஸ்தரைத் தெரிவுசெய்தனுப்புவதின் சூட்சம் யாதோ? சேர் யோசெவ் றிட்சுவே தேசாதிபதியை அவ்விடத்துக் கனுப்புவதற்கிவை ஆயத்தங்கள்போலும்.

முத்துக்குளிப்பு—.Pearl Fishery.—இலங்கைக்கு அழைக்கப்பட்டு முத்துச்சிப்பிப்பார்களைப் பரிசோதனை செய்து போன கேட்மன் பண்டிதரின், யோசனைப்படி அடுத்தவருடம் பங்குனிமாதத்தில்முத்துகுளிப்புநடக்குமெனவோர் செய்திபிறந்திருக்கிறது.

ஆட்கள்.—Personal —கண்டித் திறினிற்றிக்கல்லூரியின் தலைவராயிருந்த கனம். றைட் அவர்கள இங்கிலந்துசெல்ல, அவருடைய இடத்துக்கு, முன்யாழ்ப்பாணத்திலே சேன்யோன்ஸ் கல்லூரித்தலைவராயிருந்து ஊர் சென்றவராகிய கனம். காட்டர் அவர்கள் நியமனமாகிக் கடமையை யேற்றுநடத்துகின்றனர்.

இலங்கைப் பொலிஸ் பட்டாளத்தலைவராய் நியமனம் பெற்ற மேஜர் டீஉவில்றன் இலங்கை வந்து தமது உத்தியோகங் கையேற்க, அயிட்டிங்காய் அவ்வேலை பார்த்தவராகிய மெஸ். யோன் றட் கொழும்புப்பொலிஸ் தலைவராய்க் கடமைபார்க்கின்றனர்.

இங்கிலந்திலிருந்து வந்த கனம் அன்னன் ஐயர் கல்லூர்மிஷன் வேலையை யொப்புக்கொள்ள, அங்கிருந்த கனம். பிச்போட் ஐயர் வீவிற் செல்லுகின்றனர்.

கொழும்பிலே புறொக்கர் வேலையிலிருப்பவராகிய மெஸ். ஏ. எம். சிற்றம்பலம் ஓர் வழக்குச் சம்பாதமாய் யாழ்ப்பாணம் வந்து தங்குகின்றனர். வழக்கு முடிவாக மறுபடியும் தமது உத்தியோகஸ்தானம் நோக்குவார்.

கண்டியிற் தபால்ஆபீசிலிருந்தவராகிய மெஸ் எம். சமரசிங்கம யாழ்ப்பாணத்துக்கும் யாழ்ப்பாணத்திலிருந்த மெஸ். ஆர். ஜே. நிக்கலஸ் கண்டிக்கும் மாற்றப்பட்டனர்.

வித்தியாகர்த்தர் மெஸ். பறூஸ் வருமமாதத்தில் யாழ்ப்பாணத்தைத்தரிசித்துப்போகவிருக்கிறதாகக்கேள்வி.

## POPULATION OF JAFFNA.

From the Census of March 1901 we learn some interesting facts which should also prove of practical worth. The total population of the Peninsula is 301, 750 which is a gain over that of 1881 in round numbers of 35,000 or a little over 13 per cent. This population is divided up as follows:—

| | |
|---|---|
| Jaffna | 45,677 |
| Valigamam east | 24,406 |
| Valigamam north | 44,402 |
| Valigamam west | 45,854 |
| Vadamaradchi east | 4,246 |
| Vadamaradchi west | 48,543 |
| Tenmaradchi | 37,645 |
| Pachchilaipaly | 6,076 |
| Karaichchi | 2,879 |
| Punaryn | 4,820 |
| The Islands | 32,659 |
| Delft | 3,905 |
| Tunukkai | 638 |
| | 301,750 |

Jaffna Town Vadamaradchi West and Karaichchi have increased in the 20 years by a little over 11 per cent. The three Valigamams average 20 per cent gain and these three districts have over one third of the whole population. The largest percentage of increase is in the Islands including Delft, though we suspect this is partly due to a more accurate taking of the Census last year. But when we look to the eastern and southern parts of the peninsula we find a loss of from 5 to 9 per cent. It is these districts that are to be specially helped by the opening of the Northern railway and we shall await with interest the development of this part of the peninsula. It cannot be expected however that the population will increase very materially. The land is largely taken up by cocoanut estates and paddy fields and unoccupied lands will be used principally for these purposes. But we look to see a turn in the tide in the next ten years, a slight increase instead of a decrease.

Another fact to be noticed is that the congested parts of the peninsula have not been relieved during the past 20 years, but on the contrary have become more congested. It is from these districts that we should look for a considerable number of people to take up land and develop the Province south of Elephant Pass, for the population of the Province excluding the Jaffna District is only about 40,000. But the mere running of a railway through the Province is not enough. The restoration of the Tanks must be pushed on vigorously and inducements offered to take up wild lands, clear them and bring them under a state of cultivation. If a few thousand people from the three Valigamams would only go down and take up lands and begin the process of clearing, we predict that ten years hence the Census Returns would show a very substantial increase in the population south of Elephant Pass.

## DELFT PONY.

Jaffna Kachcheri
19th August 1902

Sir,

I have the honor to forward you the undermentioned information for publication in your paper, as I think it may be of interest to your readers—

"The Delft pony, bought by Sir Francis Burdett at the time of His Excellency the Governor's visit in March last, has taken the first prize at the Colombo Horse Show"

I am, Sir,
Your Obedient Servant,
J. P. LEWIS
Acting Govt. Agent.

The above letter was received a day or two ago and speaks for itself. Our Govt. Agent, Mr. Ievers, has taken a great interest in the breeding of horses at Delft and it is due to his watchful care and his introduction of fresh blood that the breed of horses has improved so rapidly. In his report Mr. Ievers says,

"From the commencement of the experiment in 1898 the total expenditure has been Rs. 5, 140.36, and the revenue Rs. 7,839.80, giving a net profit of Rs. 2,699. 44. The expenditure includes, besides the annual staff expenses, the building of enclosures and the purchase of stallions. The experiment has so far been a success financially, but I do not so much regard the making of revenue as the protection and improvement of these ponies, which are so hardy and useful in a climate like north Ceylon, where Australians cannot be kept.

From the breeding point of view the experiment has been successful, and the cross of the Delft with the Arab has produced a very much improved young stock, which is now coming on for sale After another year all the young stock will be either half-bred Arab or half-bred Indian."

There were at Delft at the close of the year 2 stallions and 60 Brood mares; and on Delft and Iranativu together about 60 colts. It has been clearly demonstrated that this business can be carried on without pecuniary loss to the Govt., to say nothing of the chances of its being a source of profit. We have seen in use one or two very fair specimens of the Delft pony, and they bid fair to turn out good investments. It would not be surprising if there should be a brisk demand for them. The Govt. Agent is to be congratulated upon the success of his experiment.

## THE POST OFFICE.

The report of the Postmaster-General is unusually dry reading, though the sundry statistical tables show that this department is advancing. The weight of mails sent from Ceylon to the United Kingdom is steadily increasing and the local island business is also on the increase.

In the money order department the total number of orders has increased though the amount of money these orders represent is slightly under the total for 1900. The number of Postal orders issued is also larger and represents a larger sum of money. But the Report fails to take note of one or two things that are not at all creditable to the department. For example, the number of letters that go to the wrong address must be very large. To be sure these finally find their way to the right place, but the delay is very annoying. Then the inability to furnish stamps of different denominations because they are not kept in stock put the public to great inconvenience. Reform is needed along these and other lines that might be mentioned.

## PUBLIC INSTRUCTION.

"EDUCATIONAL PROGRESS."

*(Continued.)*

A change has also been made as regards arithmetic, for which I am mainly responsible. My own feeling is that the worst feature of our Codes is that they are too inelastic. They lay down a hard and fast standard in a lordly sort of way, as though ideas and requirements which apply to a flourishing school in Colombo were equally applicable to an isolated little school in the interior of Uva. We shall only have a good Code when we have a sufficient choice of schedules to suit all needs. Meanwhile a first step in this direction has been taken in the matter of arithmetic. A revised schedule was drawn up and inserted in the Code for 1901, by no means too difficult for town schools, but in my opinion not to be expected of backward and outlying schools. A much easier schedule has now been supplied for such schools, which ensures a knowledge of elementary arithmetic, but leaves out or postpones to a later stage the more difficult parts; while at the same time schools which take up the more advanced schedule are rewarded by a higher grant. It is hoped that this will be a real relief to managers who have hitherto complained, and, I think. with justice that our ambitious requirements in arithmetic created a disheartening dilemma.

It may be dangerous, but it is perhaps a duty, to lay down in a few lines some sort of a theory for the future. On such a theory there must necessarily be wide differences of opinion, but some such attempt is surely better than merely mechanical existence from hand to mouth. The points which I venture to think we ought to keep steadily in view are the encouragement of better modes of teaching, greater latitude in our curricula and school arrangements, the improvement of the status and pay of the teachers, and an increasingly sympathetic relationship between the Department and managers and teachers. To deal with them very briefly. For the better modes of teaching I look to our new Training College, to model lessons from our Inspectors, and to the co-operation of managers and of our best teachers. We have first to realize how much there is to be done; how terribly backward we are in our methods of dealing with such subjects as History and Geography for instance; how much too ambitious many of our best schools are as to the number of subjects they aspire to teach; how much easier and therefore more common it is to encourage mechanical memorising instead of cultivating observation, intelligence, inquiry; how useless lessons are unless the teacher prepares them beforehand. As we improve in these points, it wlll be more and more possible to relax our too strict regulations, to let teachers have more voice in the arrangement of their time tables, to trust less and less to annual examinations, to foster education in the true sense, with a view to requirements of localities and the best interests of the children. As to the status of teachers, Government has made a beginning, so far as its teachers are concerned, by raising slightly the pay of the worst paid .but there is still a great deal more to be done if we are to attract the men we want, as I urged in a special report; while as to aided schools. I see no hope of improvement until salaries are raised and a pension scheme started. To effect these two purposes I should like to see fees resolutely increased and the opening of new schools postponed. The mere teaching of so many thousand children is of small importance compared to the question of *how* they are taught; and therefore, I have not for the moment given a place in my theory for the future to a large numerical increase in schools because I do not think this should be aimed at or desired until we have gone a good deal further in ensuing efficiency in those we possess."

## CORRESPONDENCE.

### Relationship between Missionary and Tamil workers.

*(Concluded.)*

11. The pay to the agents should also be improved as far as possible. There are many men of spirit and talent who stand out as they are not willing to submit to the treatment in the Mission.

12. A Mission Agent should always receive greater consideration from the Missionary than any outsider.

13. The caste system or other social customs of the people should not be rashly interfered with. It will be more Christ-like to create a good public opinion and allow time to do its slow and sure work when possible.

14. When the Tamil worker does a mistake let the Missionary talk to him lovingly and pray with him. This would often be more effective than a fine or a censure.

15. It should be borne in mind that the Mission workers as a rule are poorly paid and that most of them stay here in the interest of their families, often depending more or less upon resources of their own. In many cases they could earn from two to five or six times as much as they are paid in the Mission if they seek pastures abroad. Some there are who are actuated with the noble object of serving their country.

16. The Tamil workers should remember that the work of the Missionaries is a responsible and many-sided one and they must feel it their duty to God and to their country to do their work with thoroughness and efficiency according to the dictates of their conscience. Even if they are not rightly understood and rewarded by the Missionary let them look to a higher reward from heaven.

17. The Tamil workers should cultivate whatever is good in the manners and qualities of the Missionaries and thus make the way easy for a closer sympathy between the two classes. Straightforwardness would be always appreciated by a European if properly shown. More of self-respect and less of servility would do wonders. Care must be taken not to confound self-respect and self-confidence with impudence or conceit.

18. The two classes should learn more of the language and literature of each other. This would go a great way to create sympathy. I shall not of course speak of the spiritual means of grace along with the others I have mentioned.

These are a few ways which I could suggest. They are suggestions founded upon opinions current among the generality of Tamil workers. I have made these observations with the true object of doing good. Let none think that I have written with a carping spirit. I appreciate the large heartedness of Mr. Brown as every body else would and I sincerely trust that my outspoken words would be equally appreciated by all, unwelcome as may be some of the remarks to the two classes. I have spoken generally, and I need not say that there are noble exceptions. By Missionary work I have kept more in mind the work of the evangelistic Missionary than the purely educational Missionary whose work is in many respects different from the others although the end is the same. I have written from an independent standpoint feeling that if the two sides of the question be rightly considered much good will result, and not with a view of criticising missionary work in general.

I thank you, sir, for giving space in your columns for this rather long communication and in order to shut out any considerations of personality from the minds of the readers, I beg to take shelter for the present under the *nom de plume of*

A. TAMIL WORKER.

Jaffna
9th Aug. 1902.

## FROM INDIAN ROYAL FAMILIES TO CHRISTIANITY.

The Rev Imam Masih, a Baptist missionary in Calcutta, gives an account in the Report of his Society of the influence of Christian teaching on two Indians belonging to Royal families. The first is Sirdar Butta Singh, a Hindu from Kapurthala, belonging to the princely house of that name. Having heard of Mr. Masih, the Sirdar came to see him and continued the acquaintance thus begun. The Bible was carefully gone through and then spite of the loss he would have to suffer on account of excommunication from his caste, "the Sirdar was baptized on the 26th May 1901. After his baptism, the Sirdar went as a missionary to his countrymen and as was expected was subjected to much persecution and had it not been for the timely help extended to him by the Rev. Mr. Newton of the Irish Presbyterian Mission, we cannot imagine what might have befallen him. "The Sirdar is at present in Calcutta working at Howrah in conjunction with the Rev. W. S. Mitchell. The other is the Nawab of Tollyganj, a Muhammadan nobleman of position and great wealth.

*"Christian Patriot"*

## NOTES.

—Dr. Roger S. Tracy, the eminent physiologist says, that a child starting life with a good constitution ought to live to be a hundred years of age, if he will be a light eater and drinker, abstain from all intoxicants, avoid anger and violent emotion, and lead a quiet, useful life.

—The great clock at Rouen has been measuring time and striking the hours and quarters for over 500 years, and, it is said, has been running all this time without interruption.

—Assuming that the population of the earth is 1,000,000,000 and that the entire population is renewed once in every thirty-three years, the number of deaths a day will be 82,191.

—Nearly ten million copies of the Bible were sent forth last year by the two largest Bible Societies of England and the United States.

—The Yale Chinese Mission had one of the most interesting announcements of the college commencement season this year, in the United States, The proposal is for a Mission to China under the auspices of Yale. It will, we understand, work in the same lines as the Cambridge and Oxford Missions to India.

Printed at the Press of Strong and Asbury, Manepay.
Published by A. C. Mission and Tambyah Strong Cooke.